STI ROADSHOW

22/3/2012 - Tamil Nesan.

# எஸ்டிபிஎம் தேர்வில் தேர்ச்சி பெறாத மாணவர்களுக்கு வழிகாட்டுகிறது

# கல்வி சமூக ஆய்வு அறவாரியம்




ஏற்பாட்டுக் குழுவினருடன் நடராஜா.

**(செய்தி : தயாளன் சண்முகம்**
**படம் : எம்.ரவி)**

**கோலாலம்பூர், மார்ச் 22-**

எஸ்டிபிஎம் தேர்வில் சிறப்பு தேர்ச்சி பெறாத இந்திய மாணவர்களின் எதிர்காலத்தை கருத்தில் கொண்டும் மலேசிய கல்வி சமூக அறவாரியம் (இடபள்யூஆர்எஃப்) நாடு தழுவிய நிலையில் ரோட் ஷோ எனப்படும் இந்திய மாணவர்களுக்கான தொழில் திறன் ஊக்குவிப்பு கருத்தரங்கை ஏற்பாடு செய்துள்ளது.

பல இந்திய மாணவர்கள் எஸ்டிபிஎம் தேர்வுக்குப் பிறகு என்ன செய்வது என தெரியாமல் தங்களின் வாழ்க்கையை தொலைத்து விடுகிறார்கள். அதுமட்டுமல்லாமல் பல சீர்கேட்டுப் பிரச்னைகளில் சிக்கித் தவிக்கிறார்கள். அதற்கு அடிப்படை காரணம் அவர்களுக்கு சரியான வழிகாட்டி இல்லாததுதான் என கல்வி சமூக அறவாரியம் தலைமைச் செயலாளர் கே. நடராஜா தெரிவித்தார்.

எஸ்டிபிஎம் தேர்வுக்குப் பிறகு பல இந்திய மாணவர்கள் மேல் படிப்பை தொடராமல் வேலை செய்யத் தொடங்குகிறார்கள். அதன் காரணமாக அவர்களுக்கு கல்வியில் மேல் உள்ள நாட்டம் குறையத் தொடங்குகின்றது. அதோடு இன்னும் சில மாணவர்கள் தகாதவர்களுடன் சேர்ந்து தீய செயல்களில் ஈடுபட்டு சமுதாயத்திற்கு களங்கத்தை ஏற்படுத்துகிறார்கள். இவை அனைத்தையும் மாற்றியமைக்க வேண்டும் என்ற நோக்கத்தில்தான் இந்த நிகழ்சி ஏற்பாடு செய்யப்படுவதாக நடராஜா தெரிவித்தார்.

கல்வியில் தேர்ச்சி பெறாத மாணவர்களுக்காக மனிதவள அமைச்சின் கீழும் விளையாட்டுத் துறை அமைச்சின் கீழும் 25 ஆயிரம் தொழில் திறன் பயிற்சிகள் இருக்கின்றன. ஆனால் பல இந்தியர்களுக்கு அதை பற்றி தெரிவதில்லை.

அதனால் அந்த வாய்ப்புகளை அவர்கள் தவறவிடுகிறார்கள். அதை பற்றி அவர்களுக்கு விரிவாக விளக்கத்தை வழங்கவிருப்பதாகவும் அவர் மேலும் சொன்னார்.

இந்த நிகழ்ச்சியில் பங்கு பெறும் மாணவர்களுக்கு முதலில் தேர்வு வைக்கப்படும். அதன் மூலம் அவர்களின் கல்வி நிலையையும், அவர்களின் ஆற்றலையும் தெரிந்து கொண்டு அதற்கு தகுந்த தொழில் திறன் பயிற்சியில் நாம் தேர்ந்தெடுத்து தருவோம்.

அதோடு மட்டுமல்லாமல் அவர்களுக்கு தேவையான அனைத்து விளக்கங்களையும் வழங்குவதற்கு தயாராக உள்ளோம் என நடராஜா தெரிவித்தார்.

இந்த இந்திய மாணவர்களுக்கான தொழில்திறன் ஊக்குவிப்பு கருத்தரங்கு வரும் மார்ச் 24ஆம் நாள், சுங்கைபட்டாணி, பட்டர்வொர்த், சுங்கை சிப்புட், தெலுக் இந்தான், காஜாங் ஆகிய இடங்களிலும் மார்ச் 25ஆம் தேதி பினாங்கு தீவு, கிள்ளான், பத்து கேக்ஸ், மலாக்கா, ஜொகூர் பாரு ஆகிய இடங்களிலும் நடைபெறவுள்ளன.